உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றிக் கொள்ளலாம் என்று சில பேர் எண்ணம் தெரிவித்திருக்கிறார்கள். கூடுமான வரையில் அப்படி மாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுமானால் மாற்றலாம் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநருக்குக் கூறப்பட்டிருக்கிறது. எப்படியும் இந்த ஆண்டு இறுதியில் முடிவு எடுக்கப்பட்டுவிடும். அறவே நீக்காத அளவுக்கு—எந்த அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாமோ அந்த அளவுக்குக் குறைக்க—முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஓராண்டு விட்டு ஓராண்டு எடுப்பது என்ற முறையில், இந்த ஆண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் முதல் வருடப் பிரிவில் புதிதாக மாணவர்களைச் சேர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு எடுக்கப்பட்டுவிடும். உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற கருத்தை மனதிலே கொண்டு, எண்ணிக்கையை 40 லிருந்து 30, 20 என்றும் வைத்துக்கொள்ளலாம். 129 நிறுவனங்களில் சில பல பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாகக்கூட மாற்றலாம். மாவட்ட வாரியாக எடுக்கச் சொல்லியிருக்கிறேன். ஒரு மாவட்டத்தில் ஒரே யொரு ஆசிரியர் பள்ளி இருந்தால் அதை அப்படியே விட்டுவிட்டு, எங்கெங்கே அதிகம் இருக்கின்றனவோ அங்கே எடுக்கலாமா என்ற முயற்சியும், குறைவாக இருக்கும் இடங்களில் அப்படியே நிறுத்திக் கொள்ளவும் ஆன முயற்சிகள் ஆராயப்படுகின்றன. இதெல்லாம் ஆராய்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு முடிவு எடுக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(இ) கோவை மாவட்டத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகள் இல்லாமையும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பும்.

திரு. சு. துரைசாமி : துணைத் தலைவர் அவர்களே. சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட பொருள் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

"திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலும், கோவை மாவட்டத்திலும் பருத்தி விவசாயத்திற்குப் பயன்படுகிற பூச்சி மருந்துகள் இல்லாததால் விவசாயம் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது பற்றி".

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கோவை மாவட்டத்தில், குறிப்பாக கோயம்புத்தூர், திருப்பூர், பகுதிகளில் பருத்தி விதைப்பு இப்பொழுதுதான் தொடங்கப்பட்டுள்ளது.

பருத்திப் பயிர்களுக்கான பூச்சிக் கொல்லி மருந்துகள், விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, கோவை மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறையின் கிடங்குகளில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் இப்பொழுது சேமித்து வைக்கப்பட்டுள்ள, பருத்திப் பயிருக்கு ஏற்ற, மருந்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்.	மருந்தின் பெயர்				1—7—1972 அன்றுள்ளவாறு கையிருப்பில் உள்ள அளவு.
(1)		(2)			(3)
					மெட்ரிக் டன்
		தூள்			
1.	B. H. C.	10	சதவீதம்		920·000
2.	B. H. C.	50	,,	W.P.	312·000
3.	D. D. T.	5	,,		207·000
4.	D. D. T.	50	,,		72·000
5.	கார்பரைல்	10	,,		136·000
6.	கார்பரைல்	50	,,	W.P.	2·000
7.	,,	85	,,	W.P.	1·000
8.	செவிடால் கிரானுவல்ஸ்				2·000
9.	கந்தகத் தூள்				108.000
10.	கந்தகம் (ஈரம்)				0·495
11.	தாமிரக் காளான் நாசினி				398·000
12.	O. M. S. D.	1	,,	(காய்ந்தது)	2·000
13.	,,	3	,,	(ஈரம்)	2·000
14.	,,	6	,,	(ஈரம்)	0·016
15.	துத்தநாகம் பாஸ்பைடு				0·877
16.	தாமிரச் சல்பேட்				13·000
17.	பேரரேட்				21·000
		திரவம்			
					லிட்டர்கள்
18.	எண்டிரின்	20	சதவீதம்	E.C.	48,000
19.	எதில் பாரதைன்	50	சதவீதம்		2,900
20.	,,	46·7	சதவீதம்		8,569

தொடர் எண்.	மருந்தின் பெயர்.	1—7—1972 அன்றுள்ளவாறு கையிருப்பில் உள்ள அளவு.
(1)	(2)	(3)
		லிட்டர்கள்
21.	மெதில் பாரதைன் 50 சவவீவம் E.C.	145
22.	மெடாசிட் கோம்பி	549
23.	பராக்ளோார்	62,365
24.	டெக்ஸோபேன் × D.D.T. E.C.	3,800
25.	டையால்டிரின் E.C.	584
26.	எண்டிஸல்பேன்	1,100
27.	வாமிடிதயான்	118
28.	மெதில் டெமிடான்	1,300
29.	டிமிதோட்	2,641
30.	பாஸ்போமைடீன்	2,800
31.	நாவன்	381
32.	மோனேகுரோடோபிஸ்	2,300
33.	பெனிடிரோதையான்	4,356
34.	உறினேசான்	130

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மருந்துகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	திராவகம்	
1.	எண்டிரின் 20 சதவீதம் E.C.	3,000
2.	நுவுக்கிரான்	260
3.	மெட்டாவிஸ்டாக்ஸ்	200
4.	பராக்கிளோர்	1,000
5.	டிமாக்கிரான்	30
6.	அராகர்	220
7.	ஆன்தியோ	500
	தூள்	
8.	சேவின்	750 கிலோ
9.	கந்தகத்தூள்	2 டன் 700 கிலோ

மாவட்டத்தில் வேளாண்மைக் கிடங்குகளில் தற்போது உள்ள இரசாயன உர இருப்புகள் சாகுபடி செய்பவர்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவையாகும்.

கோயம்புத்தூர் மாவட்டம் உட்பட இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு வேளாண்மைத் துறைக் கிடங்குகளில் போதுமான அளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ளவும் பூச்சிக் கொல்லி மருந்துப் பற்றுக்குறையினால் பருத்தி மற்றும் ஏனைய பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்படாமலும் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளின் இருப்பைப்பற்றித் தெரிவித்தார்கள். இந்த இருப்பெல்லாம் எந்தத் தேதியில் இருந்த விவரம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற இருப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்போதுள்ள இருப்பை நான் சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. இன்றைய நிகழ்ச்சி நிரலில், "2. அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பில் இனம் " (3) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72)" என்பதனை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.